**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தினுடைய பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையிலும் மிகக் கண்டிப்பாகவும், அதற்கான விதிமுறைகளை எல்லாம் கட்டுப்பாடாகவும் நாம் நிறைவேற்றி வருவதன் காரணமாக, இதிலே தில்லுமுல்லுகளோ மற்றவைகளோ செய்வதற்கு எந்த வகையிலும் வழி கிடையாது. ஏனென்றால் அச்சடித்துத் தருகின்ற முழுப் பொறுப்பையும், விநியோகிக்கின்ற முழுப் பொறுப்பையும் நாமேதான் வைத்துக்கொண்டு இருக்கிறோம். தனியார் பரிசுச்சீட்டு ஏஜென்டுகளோ மற்றவர்களோ பரிசுச் சீட்டுகளை அச்சடிக்க முடியாது. ஆனால், பிற மாநிலங்களிலிருந்து வருகின்ற பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற குறைபாடுகள் ஏராளம் இருக்கின்றன. அநேகமாக பரிசுச் சீட்டுக்காரர்களுக்கு மொத்தமாக கான்ட்ராக்ட் பேசிஸில் சில மாநில அரசுகள் பணத்தை வாங்கிக்கொண்டு, அவற்றை அடித்து வெளியிடுகின்ற பொறுப்பை அந்த ஏஜென்டுகளுக்கே விட்டு விடுகிறார்கள். அவர்கள் தங்கள் இஷ்டம்போல ஒன்றுக்குப் பல என்று அடித்து விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதை நாம் தடுக்க முடியாது. அந்தந்த அரசுகள்தான் தடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 382, திரு. ஆர். சிங்காரம், இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

***382--***

**நீதிபதி மாலிமத் குழு அறிக்கையைப் பரிசீலித்தல்.**

***21701**--திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேங்கிக் கிடக்கும் வழக்குகளை முடிப்பது பற்றி நீதிபதி மாலிமத் கமிட்டி கொடுத்த அறிக்கையைப் பரிசீலிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*முற்பகல் 10.10*

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முடிவுறாமல் நடப்பிலிருந்து வருகிற வழக்குகளை முடிவு செய்வதற்காக ஜஸ்டிஸ் மாலிமத் குழு செய்துள்ள பரிந்துரைகள் 1992 அக்டோபர் 17, 18 தேதிகளில் பெங்களூரில் நடைபெற்ற சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் பரிசீலிக்கப்பட்டன. அக்கூட்டத்தில் சட்ட

*1994 ஏப்ரல் 26]*

அமைச்சர்களைக் கொண்ட 3 செயற்குழுக்கள்-- ஒர்க்கிங் குருப்ஸ் அமைக்கப்பட்டன. அந்தக் குழுக்களின் பரிந்துரைகள் டெல்லியில் 1993 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 4 ஆம் தேதி நடைபெற்ற சீப் மினிஸ்ட்டர்ஸ், சுப்ரீம் கோர்ட் ஜட்ஜஸ், சீப் ஜஸ்டிஸஸ் ஆப் வேரியஸ் ஸ்டேட்ஸ் ஆகியோர் அடங்கிய மாநாட்டில் பரிசீலிக்கப்பட்டன. அந்த மாநாட்டில் சில முடிவுகள் எடுக்கப்பட்டு, மாநில அரசுகளின் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன. அவற்றை நாங்கள் சென்னை உயர்நீதிமன்றத்துடன் விரிவாகக் கலந்தாலோசித்து வருகிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Justice delayed is justice denied' என்று சொல்வார்கள். நீதி உடனுக்குடன் கிடைத்தால்தான் நாட்டு மக்கள் தாங்கள் எந்த நோக்கத்திற்காக நீதிமன்றத்தைச் சென்று அடைந்தார்களோ, அந்த நோக்கம் நிறைவேறியதாகப் பொருள்படும். ஆனால் சில வழக்குகள் என்றல்ல, பல வழக்குகள் இன்று நம்முடைய தமிழகத்திலும் சரி, மற்ற நமது நாட்டில் இருக்கக்கூடிய பல மாநிலங்களிலும் 10,12 வருடங்களாகக் கூட சில கிரிமனல் வழக்குகள் பெண்டிங்காக இருக்கின்றன. சிவில் வழக்குகள் என்றால் சொல்லவே வேண்டாம். 15, 20 வருடங்கள் கூட வழக்குகள் நிலுவையில் இருக்கிற நிலையை நாம் பார்க்கிறோம். இதனால் ஏற்கெனவே ஒரு கிரிமினல் வழக்கு என்று சொன்னால் இரண்டு மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்ற ஒரு நிலையை வைத்திருந்தார்கள். அதற்குப் பிறகு ஏதாவது பெண்டிங் என்று சொன்னால் அதற்கான விளக்கத்தைக் கொடுப்பார்கள். ஆனால் இப்போது 12 ஆண்டுகள் ஆனாலும் கூட கிரிமினல் வழக்குகள் நிலுவையில் இருப்பது என்பது வேதனை அளிக்கிறது. சிவில் வழக்குகள் அதைவிட தாண்டிப் போய்க் கொண்டிருக்கின்றன. ஆகவே, நம்முடைய மாநில அரசு குற்ற வழக்கு என்று சொன்னால் இரண்டு மாதங்களுக்குள்ளாக முடிக்க வேண்டும், சிவில் வழக்கு என்று சொன்னால் இரண்டு வருடங்களுக்குள்ளாக முடிக்க வேண்டும் என்கிற ஒரு நிலையை உருவாக்கி, உடனடியாக தமிழக மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது 'Justice delayed means justice denied' என்று சொன்னார்கள். இன்னொரு பழமொழியும் உண்டு. 'Justice hurried is justice buried'. அவசரமாக வழங்கப்படுகிற தீர்ப்புகள் வழக்குகளை மரணக்குழிக்கு அனுப்புவதைப் போன்றது என்று--'Justice hurried means justice buried' என்று சொல்வார்கள் என்பதால் இன்றைக்கு எச்சரிக்கையாக

இருக்கிறது. டெல்லியில் கூடிய கூட்டத்தில் சீப் ஜஸ்டிஸஸ், சீப் மினிஸ்டர்ஸ் மற்றும் பிரைம் மினிஸ்டர் கூட கலந்து கொண்டார்கள். அந்த மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டு, 12 பரிந்துரைகள், 12 ரெக்கமண்டேஷன்ஸ் அளித்து, அதைத்தான் நாங்கள் இன்றைக்கு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம். இது டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. இப்போது நாம் இருப்பது ஏப்ரல் மாதத்தில் என்பதால் 4 மாதங்கள்தான் ஆகியிருக்கிறது. விரைவில் உயர்நீதிமன்றத்திலிருந்து பரிந்துரைகள் வரும். அந்தப் பரிந்துரைகள் வந்த பிறகு, அவைகள் எல்லாம் அமல் செய்யப்படும். அப்படி அமல் செய்யப்படுகிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குறைகள் எல்லாம் நிவர்த்தி செய்யப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருக்காக நீங்கள் கேட்பது. ஆகவே ஒரு கேள்விதான் கேட்கலாம், இரண்டாவது கேள்விக்கு அனுமதி இல்லை. திரு. டி. வேலையா.

**திரு. டி. வேலையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜஸ்டிஸ் Buried-ஆகவும் இருக்க வேண்டாம், 'Denied'--ஆகவும் இருக்க வேண்டாம். எப்படியாவது நாம் 'delay'-யைப் போக்கியாக வேண்டும். பெரிய அளவில் எடுக்கிற பல்வேறு நடவடிக்கைகளுக்கு இடையே சில சிறுசிறு விஷயங்களால் கோர்ட்டினுடைய நடவடிக்கைகள் தாமதமாகின்றன. உதாரணமாக ஒரு மாஜிஸ்ட்ரேட்டை எதிர்பார்த்து, திருத்தணியில் இருக்கிற ஒரு டாக்டரும், கோயம்புத்தூரில் இருக்கிற ஒரு இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீசும், தஞ்சாவூரில் இருக்கிற மாஜிஸ்ட்ரேட்டும் வந்து நீதி மன்றத்தில் காத்து இருக்கிறார்கள். மாஜிஸ்ட்ரேட் வருவாரா, இல்லையா என்று தெரியாமல் இருக்கிற நிலையில் கடைசி நேரத்தில் மாஜிஸ்ட்ரேட் விடுமுறையில் சென்று விட்டார் என்று சொல்கிறார்கள். இந்த 3 அரசு அதிகாரிகளும் அரசு அலுவல்களுக்கு இடையூறாக அங்கேயிருந்து வந்து விட்டு திரும்பிப் போய் விடுகிறார்கள். இதைப்போல மாஜிஸ்ட்ரேட் அங்கே தயாராக இருக்கிறபோது அரசாங்க அதிகாரிகள் பல்வேறு இடங்களிலிருந்து வருவார்களா, வர மாட்டார்களா என்று தகவல் கூட தெரியாமல், அந்த வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. இதைப்போன்ற சிறு சிறு காரியங்களால் அன்றாடம் நீதிமன்ற அலுவல்கள் தடைப்படுவதால் தான் அதிகமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. பழைய காலத்தில் எல்லாம் ஒரு டாக்டரோ, மாஜிஸ்ட்ரேட்டோ நீதிமன்றத்திற்கு வருவாரா, வர மாட்டாரா என்பதை காவல் துறையைச் சேர்ந்தவர்கள், வழக்கைத் தொடுப்பவர்கள், தகவல் எல்லாம் சொல்லி உதவி

*1994 ஏப்ரல் 26*]

செய்வார்கள். இப்போது அந்த உதவி செய்கிற பழக்கம் எல்லாம் நின்று விட்டது. யார் வந்தால் என்ன, போனால் என்ன என்று, எல்லோரும் யாருக்கு வந்த கடமையோ என்று நீதிமன்றத்தில் வந்து காத்து இருக்கிறார்கள். பிறகு கலைந்து போகிறார்கள். இதுதான் இப்போது முக்கியமான காரணமாக இருக்கிறது. இதை எல்லாம் மீண்டும் ஒழுங்குபடுத்தி, விசாரணைக்கு உதவுகிற வகையிலே, இன்வெஸ்டிகேடிங் ஆபீசராக இருப்பவர்கள் நல்லமுறையில், பழைய காலத்தைப் போல ஒத்துழைப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை தங்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்து சிறந்த கருத்து. இந்தக் குறை இருக்கிறது. இந்தக் குறையைப் போக்க, மாண்புமிகு நமது முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு தீர்க்கமான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். வழக்குகள் எல்லாம் தேங்காமல் இருக்க அவர்கள் சொல்வது போல், Investigating Officer--Police. அடுத்தது, 'லா ஆபீசர்ஸ்' அங்கேயிருக்கிற சட்ட அதிகாரிகள். மூன்றாவதாக, ஜுடிசியரி-அங்கே இருக்கிற நீதிமன்றங்கள், நான்காவதாக, 'Administration of Jails'-இந்த 4 அங்கங்களும் சரியாக இருந்தால்தான் நீதி வழங்கியதாகப் பொருள். ஆகவே, முதல் கட்டத்தில் போலீசார் Investigation - Charge-sheet போடுவதிலிருந்து, சாட்சிகளை அழைத்து வருவதிலேயிருந்து, அந்த சுணக்கங்களைப் போக்கத்தான், இதுபோன்ற Law officers, Public Prosecutors, Government Pleaders-இவர்கள் எல்லாம், துரிதமாகப் பணியாற்ற, அதற்குப் பிறகு ஜுடிசியரி, நீதிமன்றங்களிலே இப்படிச் சில தவறுகள் இருந்தால், அவைகளைப் போக்க, பிறகு தண்டிக்கப்பட்டால் அவன் சிறைச்சாலையில் நியாயமாக நடத்தப்பட, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காம்ப்ரெஹென்சிவ் ஸ்கீம் என்ற வகையிலே, இந்த ஆண்டு பல தகவல்களை மானியத்தின்போது நான் தெரிவித்திருக்கிறேன். அது தொடர்ந்தால், இந்த ஆண்டு நிச்சயமாக நீங்கள் சொன்ன அந்தக் கருத்துக்கள் எல்லாம் வந்து, 'Judiciary will be streamlined; the investigating agency will be streamlined; the administration of jails will be streamlined; Law officers will be streamlined' என்ற வகையிலே, 4 அங்கங்களையும் சீரமைக்கிறபோது, துரிதமாக இந்தக் குறைகள் எல்லாம் போகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. சின்னசாமி.

**திரு. வி. கே. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் காலதாமதமாவதில், குறிப்பாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். 40 ஆண்டுக்காலம், 50 ஆண்டுக் காலம் ஆகியும்கூட முடியாத நிலை இருக்கிறது. இதைப்பற்றி ஒரு விவசாயி கவிதைகூட பாடியிருக்கிறான். 'வயல் வரப்பு தகராறுக்காக வழக்கு மன்றம் சென்றேன், வழக்கும் வாய்தாவும் அப்படியே இருக்கின்றன, வயல்மட்டும் வக்கீலுக்குச் சொந்தமாகிவிட்டது' என்று ஒரு கவிதையை விவசாயி ஒருவன் பாடியிருக்கிறான். ஆகவே, இந்த நிலைமையைப் போக்க, விவசாயிகள் வழக்கு என்றால், நிலத்தகராறு என்றால் குறிப்பிட்ட ஆண்டில் முடித்துத் தரவேண்டும் என்ற உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி, அதற்கான ஆணையைப் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே கூடிய அந்த மாநாட்டில், Chief Justices, C.M. and P.M., ஆகியோரைக் கொண்ட அந்த மாநாட்டில், இந்தப் பிரச்சினைகள் எல்லாம் ஆராயப்பட்டு, துரிதமாக நடக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்க, அந்தப் பரிந்துரைகள் வந்த பிறகு தொடர் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 383, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

*383--*

**பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் அரசு உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு நிலம் அளித்தல்**

**14739--டாக்டர் எஸ். சுந்தரராஜ்:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி தொகுதி, எமனேஸ்வரம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு விளையாட்டு மைதானத்திற்காக அருகிலுள்ள தரிசுப் புறம்போக்கு நிலத்தை அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், எமனேஸ்வரம் கிராமத்தில் 2.71 ஹெக்டேர் புறம்போக்கு நிலத்தை